
# தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி பருத்தியைத் தாக்கும் புதிய பூச்சி



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்

**மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**

மண்டல நிலையம், கோயம்புத்தூர்



முட்டை



இளம் பூச்சி முதல் நிலை



இளம் பூச்சி இரண்டாம் நிலை



இளம் பூச்சி மூன்றாம் நிலை



இளம் பூச்சி நான்காம் நிலை



இளம் பூச்சி ஐந்தாம் நிலை



பெண் பூச்சி



ஆண் பூச்சி

நிதி உதவி:
மத்திய அரசின் வணிகப் பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்
பூச்சிக்கொல்லி எதிர்ப்பு திறன் மேலாண்மை மற்றும்
இளஞ்சிவப்பு காய்ப்புழு கட்டுப்பாட்டு உத்திகள்

ம. அமுதா, கு. ரமேஷ், ர. பிரமோத் குமார், ஏ. ஹெச். பிரகாஷ்

மேலும் விபரங்களுக்கு:
முனைவர் ஏ. ஹெச். பிரகாஷ், திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர்,
மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், மண்டல நிலையம், கோயம்புத்தூர் – 641003

வெளியீடு : முனைவர் ஒய் ஜி பிரசாத், இயக்குனர்,
மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், நாக்பூர் – 440010
மார்ச் 2022

### தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி - பருத்தியில் ஒரு புதிய பூச்சி

தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி முந்திரி, தேயிலை மற்றும் கோக்கோ ஆகிய பயிர்களில் சேதத்தை ஏற்படுத்தி மகசூல் இழப்பை ஏற்படுத்தும் மிக முக்கியமான சாறு உறிஞ்சும பூச்சியாகும்.இது ஹேலாபெல்டிஸ் என்ற பேரினத்தையும் கெமிட்ரா என்ற வகையைச் சார்ந்த பூச்சி. இந்திய நாட்டில் இந்த ஹேலாபெல்டிஸ் பேரினம் மூன்று சிற்றினங்களை கொண்டுள்து. அவை ஹேலாபெல்டிஸ்ஆண்டனி, ஹேலாபெல்டிஸ் பிராய்டி மற்றும் ஹேலாபெல்டிஸ் தீயோவோரா. தேயிலை கொசு கோயமுத்தூரில் 2018 ஆம் ஆண்டு முதல் பருத்தி செடியில் சேதம் ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. பருத்தியை தாக்கும் சிற்றினம் ஹேலாபெல்டிஸ் தீயோவோரா ஆகும். தேயிலை கொசுகளின் முதிர்ந்த மற்றும் இளம் பூச்சிகள் சாற்றை உறுஞ்சி சேதத்தை ஏற்படுத்தும்.

### தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி சேதத்தை ஏற்படுத்தும் தாவர வகைகள்

தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி ஏராளமான தாவர வகைகளில் சேதத்தை ஏற்படுத்துகின்றது. காய்கறிப்பயிர்கள், பணப்பயிர்கள், அழகுத்தாவரங்கள் மற்றும் களைச்செடிகள் போன்ற பயிர்களில் சேதத்தை ஏற்படுத்துகிறது. முந்திரி, தேயிலை மற்றும் கோக்கோ போன்ற தாவரங்கள் தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி தாக்கும் முதன்மையான பயிர்களாகும். இவை தவிர வேம்பு, கொய்யா, முருங்கை, மா, சாமுன், சிங்கப்பூர் செர்ரி, கருப்பு மிளகு, தட்டைப்பயறு, சீதா பழம், மணத்தக்காளி, ஆப்பிள், தேக்கு, ஆமணக்கு போன்ற தாவரங்களிலும் சேதத்தை ஏற்படுத்துகிறது. தேயிலை கொசு ஏராளமான தாவர வகைளில் சேதத்தை ஏற்படுத்துவதால் வருடம் முழுவதும் இதன் தாக்குதல் தென்படுகிறது.

### வாழ்க்கை சுழற்சி

#### முட்டை

முட்டைகள் தனித்தனியாகவோ அல்லது 2 முதல் 5 குழுக்களாகவோ மென்மையான தளிர்கள், இலைகளில் நடுநரம்புப் பகுதிகள் மற்றும் இலைக்காம்புகளின் உட்பகுதியில் இடுகிறது. முட்டைகள் வெள்ளையாகவும் நீள் உருண்டையாகவும், ஒரு சோடி சுவாச நீட்சிகள் மட்டும் முட்டையின் முன்பகுதியில் வெளியே தெரியும். முட்டை பருவம் 6 முதல் 10 நாட்களில் முடியும்.

#### இளம் தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி

தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி 10 முதல் 14 நாட்களில் ஐந்து நிலைகளுக்குட்பட்டு முதிர்ந்த பூச்சியாக உருமாறுகிறது.

#### முதிர்ந்த தேயிலை கொசு நாவாய்ப்பூச்சி

முதிர்ந்த பூச்சிகள் சுமார் 6 முதல் 8 மிமீ நீளம் கொண்டவை. பெண் பூச்சிகள், ஆண் பூச்சிகளை விட நீளமானவை. முதிர்ந்த பூச்சிகள் அடர் பழுப்பு நிறத்தில் இருக்கும். பெண் பூச்சிகளின் கழுத்துப்பகுதியில் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிற பட்டைகள் இருக்கும். வயிற்றுப்பகுதி பச்சை நிறமாக காணப்படும். முள் போன்ற குமிழ்கள் முதுகுப்பகுதியில் காணப்படும். முதிர்ந்த பூச்சிகள் 9 முதல் 11 நாட்கள் வரை உயிர் வாழும். பெண் பூச்சி அதன் வாழ்நாளில் 60 முதல் 80 முட்டைகள் வரை இடும். வாழ்க்கை சுழற்சி சுற்றுச்சூழல் மற்றும் வானிலை காரணிகளால் பாதிக்கப்படுகிறது.

### சேத அறிகுறிகள்

- இளம் மற்றும் வளர்ந்த பூச்சிகள் இளம் குருத்து, இலைகள், மென்மையான தண்டுகள், சப்பைகள், பூக்கள் மற்றும் காய்கள் ஆகியவற்றில் தன் ஊசி போன்ற வாயால் துளைபோட்டு சாற்றை உறிஞ்சும். அப்போது அதன் வாயில் இருந்து நச்சு உமிழ்நீரை துளை போட்ட இடத்தில் உள்ளே செலுத்தும்.
- துளைக்கப்பட்ட பகுதியில் உள்ள திசுக்களைத் நச்சு உமிழ்நீர் இறக்கச் செய்துவிடும். இதனால் சேதமடைந்த பகுதிகள் கருப்பு நிறமாக மாறி விடும்.
- சேதமடைந்த இளம் குருத்து, இலைகள் மற்றும் மென்மையான தண்டுகள் வாடி கருகிவிடும். இவ்வாறு சேதமடைந்த பகுதிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். மேலும் காய்கள் வளருவதும் பாதிக்கப்படும்.
- தாக்கப்பட்ட தண்டுகளில் நீள் வடிவமான கொப்புளங்களும், காய்களின் மேற்பரப்பில் வட்ட வடிவமான கொப்புளங்களும் காணப்படும். இவ்வாறு சேதமடைந்த காய்கள் மற்றும் சப்பைகள் உதிர்ந்துவிடும் அல்லது வாடி காய்ந்து செடிகளிலேயே இருக்கும்.
- மிக அதிகமான சேதம் செடியின் வளச்சியை பாதித்து, காய்கள் வெடித்து பஞ்சு வராமல் பாதித்து குறிப்பிடத்தக்க மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.

### ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகள்

- பருத்தி மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் இருக்கும் மற்ற தாவரங்களில் தேயிலை கொசு தாக்குதலை தொடர்ந்து கண்காணிப்பது மிக முக்கியமான ஒன்றாகும்,
- பருத்தி வயலுக்கு அருகில் உள்ள கொய்யா, வேம்பு மற்றும் முருங்கை போன்ற மாற்று தாவரங்கள் பயிரசெய்வதை தவிர்க்க வேண்டும். மேலும் சில களைச்செடிகள் தேயிலை கொசு நாவாய்ப்பூச்சிகளின் இனப்பெருக்கத்திற்கு உதவுகின்றது. எனவே பருத்தி வயலுக்கு அருகில் உள்ள களைச்செடிகள், தேயிலை கொசு தாக்கும் பிற தாவரங்கள் இருப்பின் அவற்றிலும் மேலாண்மை முறைகளை பின்பற்ற வேண்டும்.
- பருத்தி அறுவடை முடிந்தவுடன் தேயிலை கொசு தாக்கிய காய்கள், சப்பைகள் மற்றும் செடிகளை பிடுங்கி அழித்துவிட வேண்டும்.
- எறும்புகள், சிலந்திகள், ரெடுவிட் பூச்சிகள் போன்ற நன்மை செய்யும் பூச்சிகள் தேயிலை கொசுக்களை ஓரளவிற்கு கட்டுப்படுத்துகின்றது.
- பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை குறைப்பதன் மூலம் டெலிநோமஸ் என்ற முட்டைஒட்டுண்ணிகளின் செயல்பாட்டை அதிகரிக்கலாம்.
- பிவேரியா பேசியானா என்ற பூஞ்சையை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.
- தாக்குதலின் ஆரம்ப நிலையில் 3 சதம் வேப்ப எண்ணெய் தெளித்து கட்டுப்படுத்தலாம்.


பெண் பூச்சி


ஆண் பூச்சி


சேதமடைந்த இளம் குருத்து


சேதமடைந்த காய்கள்